# மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்

# அசல் வழக்கு எண்.19/2014

2019 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 05-ம் நாள் செவ்வாய் கிழமை வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1 குணசேகர் என்பவரது குறுக்கு விசாரணை, திருமதி.கே.பழனியம்மாள், பெஞ்ச் கிளர்க் கிரேடு -1 என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமாணம் செய்து வைக்கப்படுகிறது.

**குறுக்கு விசாரணை 4,5,7வது பிரதிவாதிகள் தரப்பில்**

வழக்கு பி பட்டியல் சொத்துக்கள் கிரையம் வாங்கபட்ட சொத்துக்கள் என்றால் சரி. அந்த கிரைய பத்திரத்தில் நித்யா, சிவகுமார் 4,5 பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்றால் சரி. என் பெயரிலும் உள்ளது. சிவகுமார், நித்யா கிரைய பத்திரத்தில் என்னுடைய பெயர் இல்லை என்றால் சரியல்ல. எல்லோருக்கும் கூட்டாக தான் இருக்கிறது. அவ்வாறு கூட்டாக இருப்பதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த சொத்துக்களை நித்யா, சிவகுமார் ஆகியோர் அவர்களுடைய சொந்த பணத்தை வைத்து கிரையம் பெற்றார்கள் என்றால் சரியல்ல. நான் வியாபாரம் செய்து சம்பாதித்த பணத்தை வைத்தும் பொது பணத்தையும் வைத்தும் அந்த சொத்துக்கள் கிரையம் பெறபட்டது. நான் சம்பாதித்த பணம் எவ்வளவு என்று சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியாது. இவ்வாறு நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த சொத்துக்கள் எல்லாம் 4,5 பிரதிவாதிகள் கொடுத்த பணத்தை வைத்து தான் வாங்கபட்டது என்பதற்கு நானே அவர்களுடைய வங்கி கணக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அதில் குறிப்பிட்டுள்ள தொகைகள் அவர்களுடையது அல்ல என்னுடையது. வழக்கு ஏ பட்டியல் சொத்துக்கள் கிரையம் வாங்கபட்ட சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் அல்ல என்று சொன்னால் சரியல்ல. அந்த சொத்துக்கள் என்னுடைய தாத்தா, பாட்டியின் தனிபட்ட சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. அவை பரம்பரை பரம்பரையாக அனுபவிக்கபட்டு வரும் சொத்துக்கள். பரம்பரை பரம்பரையாக அந்த சொத்துக்கள் அனுபவிக்கபட்டு வருகின்றன என்பதை காட்ட

ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அந்த சொத்துக்களை பொறுத்து என் பாட்டியின் முன்னோர்கள் சம்பந்தமாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பரம்பரை வழியாக அனுபவிக்கபட்டு வந்ததற்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அனைத்து வியாபார ரசீதுகளும் இவ்வழக்கிற்கு பின்னிட்டு ஏற்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் அனைத்தும் 1,4,5 பிரதிவாதிகள் சொந்தமானது என்று சொன்னாலும் அந்த சொத்துக்களில் பாகம் கேட்க எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. 4ம் பிரதிவாதிக்கு சொந்தமான சொத்து என்பதால் 7ம் பிரதிவாதிக்கு அதை அவர் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் தவறு. அந்த சொத்திலும் நான் பாகம் கேட்க உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் பூர்வீக சொத்துக்கள் எதுவும் இல்லை என்றாலும் பூர்வீக சொத்துக்கள் இருப்பதாக வழக்கிற்கு ஏற்ப பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>10,11 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.